[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 9

புதுவாயல் ஆகிய ஊர்களின் வழியாக காட்டுப்பள்ளி வரை சென்னை எல்லை சாலை, அதாவது Chennai Peripheral Road பணிக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்படி 83.20 கிலோ மீட்டர் புதிய சாலைகள் அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே உள்ள 78.60 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படும்.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கு முதற்கட்டமாக வட்ட மற்றும் ஆரச் சாலைகள் அமைப்பதற்காக விரிவான திட்டம் தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகரங்களில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாக, நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலைகளுக்கு புறவழிச் சாலைகள் அமைப்பதற்கு விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

மேலும், புதிதாக சாலைகள் அமைகிறபோது அல்லது மேம்படுத்தத் திட்டமிடும்போது, அந்தச் சாலையைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகள் வளர்ச்சியடையும் வகையில் சாலைக் கட்டமைப்பு வளையம், அதாவது Road Grid அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டம் சென்னை வெளிவட்டச் சாலை அமையும் பகுதியில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின்மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன், நகர்ப் பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவிதச் சிரமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்குக் குறைந்த நேரத்தில் சென்றடைய வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் சார்ந்த தொழில்களில் முக்கியத்

2012 மே 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொழிலாகத் திகழும் சர்க்கரைத் தொழில் கிராமப் பொருளாதாரத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பெரிய அளவில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது.

இப்படிப்பட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சர்க்கரை உற்பத்தியில், தமிழ்நாட்டில் 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் ஈடுபட்டு வருகின்றன. இந்தச் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் நலமும், வளமும் பெற வேண்டும் என்பதே எனது அரசின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின், அதாவது South Indian Sugar Mills Association – SISMA ஒப்பந்தத்தின்படி ஊதியம் பெற்று வருகின்றனர். இதற்கு முன் இருந்த ஒப்பந்தக் காலம் 31–3–2008 உடன் முடிவடைந்தது.

1999 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்களை தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்தன. இந்த மனுக்களின்மீது சென்னை உயர் நீதிமன்றம் 4–8–2009 அன்று உத்தரவு பிறப்பித்தது. அந்த ஆணையில், தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்தைக் கண்டறியவும், அதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வருங்காலங்களில் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் சார்பாக ஊதிய உயர்வு உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள ஏதுவாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தினக்கூலிப் பணியாளர்களுக்கும், தேர்தலில் பங்கெடுக்கும் உரிமை உண்டு என அரசு விளக்கம் அளித்தது.

முற்பகல் 10–50

இதனை எதிர்த்து, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் செயல்பட்டு வரும் இரண்டு தொழிற்சங்கங்கள் நீதிப் பேராணை மனுக்களை சென்னை உயர் நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையிலும் தாக்கல் செய்து,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 9

தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்படுவதற்கு இடைக்காலத் தடை பெற்றன. மேற்படி இரண்டு வழக்குகளிலும் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை விலக்கக் கோரி சர்க்கரைத் துறை ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

இவ்வழக்குகளில் உள்ள இடைக்காலத் தடை விலக்கப்பட்ட பின்னர்தான் சர்க்கரை ஆலைகளில் தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்பட்டு, ஆலைப் பணியாளர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த இயலும்.

எனவே, முந்தைய அரசு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளுக்குக் குந்தகம் இல்லாத வகையில், தொழிலாளர்களுக்கு ad hoc ஊதியம் வழங்க 2010 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுத்தது. அதன்படி, 2008 ஆம் ஆண்டு, SISMA ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் 90 விழுக்காடு ad hoc–ஆக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு 4–4–2012 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து சர்க்கரை ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை இணை ஆணையர் ஆகியோர் முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிதிநிலை நலிவுற்று இருப்பினும், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு எவ்வித குந்தகமுமின்றி, 1–4–2008 முதல் SISMA ஒப்பந்தப்படி இறுதி செய்யப்பட்ட சம்பள விகிதத்தில் வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள 10 விழுக்காடு தொகை உடனடியாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 மே 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மேலும், சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்பட உள்ள 10 விழுக்காடு ஊதியத்தையும் கணக்கில் கொண்டு, அந்த அடிப்படை ஊதியத்தில்—Basic pay—ல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் என 1—4—2012 முதல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கவனிக்க வேண்டுகிறேன். சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்பட உள்ள 10 விழுக்காடு ஊதியத்தையும் கணக்கில் கொண்டு, அந்த அடிப்படை ஊதியத்தில்—Basic pay—ல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் என 1—4—2012 முதல் வழங்கப்படும். அதாவது, இனி வருங்காலங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் SISMA ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்படும் ஊதிய விகிதத்தின் அடிப்படை ஊதியத்தில் 25 விழுக்காட்டை சிறப்பு ஊதியமாகப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சலுகைகள்மூலம் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 1,595/— ரூபாய் முதல் 1,907/— ரூபாய் வரை கூடுதல் ஊதியம் கிடைக்கும். 2008 ஆம் ஆண்டு முதல் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படுவதால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாயும், 1—4—2012 முதல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் வழங்கப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு 12 கோடியே 46 இலட்சம் ரூபாயும் கூடுதல் செலவு ஏற்படும்.

நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், முறையான ஊதிய உயர்வு ஒப்பந்தம் செய்ய இயலாது என்பதால், தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, தொழிலாளர்கள் மற்றும் விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் பொருட்டு எனது அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. நீதிமன்ற வழக்குகள் நிறைவு பெற்றபின், முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

இந்த ஊதிய உயர்வினை ஏற்று, தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டு, உடன் பணிக்குத் திரும்புவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)